'S BOOK OF KNOWLEDGE 1

90

பாலர் மோகினி

17 JUL 1945
90

முதற் புத்தகம்

அணா ஆறு

பதிப்பாசிரியர்

வை. மு. ஸ்ரீநிவாஸன், எம்.ஏ.பி.எல்.



விஷய அட்டவணை

மோகன உருவம்	—முகப்புப் படம் ...	1
ஞானச்சுடரேற்றி வைப்போம்	—வை. மு. ஸ்ரீ. ...	2
சிறந்த வாழ்க்கை	—சுவாமி சுத்தானந்த பாரதி	9
காலத்தின் போக்கு	—ப்ர. ப. அண்ணங்கராச்சாரியர்	10
கதையின் கதை	—சூடாமணி ...	13
நாராயணா சரண்	—சுத்தானந்த பாரதி ...	17
நம் தாத்தா	— ,, ...	20
புலியும் கிலியும்	— ,, ...	24
விலங்கு நூல்	— ,, ...	27
கோதை தமிழ்	—பி. ஸ்ரீ. ஆசார்யா ...	31
பதரிகாச்ரமம்	— ,, ...	35
வேதம் தமிழ் செய்தவர்	— ,, ...	38
அன்னமும் காக்கையும்	—சூடாமணி ...	42
தந்திரம்	— ,, ...	44
சுகாதாரம்	—காப்டன் சேஷாத்ரிநாதன் ...	48
கெடுவான் கேடுநினைப்பான்	—அண்ணங்கராசாரியர்	55
கைகேயின் கதை	—வை. மு. கோதைநாயகி	61

படங்கள்—ஏ. வி. ராகவன்

17 JUL 1945
MADR
894·8113
2224

பாலகிருஷ்ணனின் மோகன வடிவம் எல்லோரையும் மயக்கியதுபோல், பாலர் மோகினியின் எழில் பாலர் உள்ளங்களைக் கவருமென்றே நம்புகிறோம்.

031,3



பாலர் உலகில்—ஞானச்
சுடரேற்றி வைப்போம்
ஞால மிதில் நம்—நாட்டு
மதிப்பைத் தூக்கிவைப்போம்.

பாரத நாட்டின் பாலர்களுக்கென்றே விசேஷப் புத்தகங்கள் வெளியிடும் பாக்கியம் எனக்குக் கிடைத்ததுபற்றி அளவற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இன்று குழந்தைகளாகவுள்ளவர்களே வருங்கால உலகத்தில் பொறுப்பு வகிக்கப்போகிறவர்கள் என்பதை உணர்ந்து, சிறுவர் அறிவு வளர்ச்சியில் சரியான சிரத்தை எடுத்துக்கொள்ளவேண்டியது அறிஞரின் கடமை. பல துறைகளிலும் பிரஸித்திபெற்ற மகா அறிஞர்களைக்கொண்டே பாலர் உலகில் ஞானதீபத்தை ஏற்றிவைப்பது என்ற தீர்மானத்துடனேயே இப்புதிய தொகுதியை வெளியிட முன்வந்தேன்.

"பள்ளிப்படிப்பு மட்டும் போதாது; அநுபவ ஞானமும் வேண்டும்" என்று பெரியவர்கள் சொல்வதை அடிக்கடி நீங்கள் கேட்டிருக்கலாம்.

பள்ளிக்கூடத்தில் கெட்டிக்காரன் என்று பெயரெடுத்து நிறைய 'மார்க்' வாங்கிவிட்டால்மட்டும் போதாது. வாழ்க்கையே ஒரு பெரிய பள்ளிக்கூடம் என்பதை நினைவில்கொண்டு, பெரியோர்களின் அநுபவங்களையும் புத்திமதிகளையும் ஏற்று, பின்பற்றி, அறிவை விசாலமாக்கிக்கொள்ள வேண்டும். விளையும் பயிர் முளையிலே!

12 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கென்றே இந்த பாலர் மோகினி வெளியிடப்படுகிறது. சாதாரணமாக பள்ளிக்கூடப் படிப்பில் சொல்லித்தரப்படாத பொது அறிவு விஷயங்களையே இந்தத் தொகுதியில் வெளியிடுகிறேன். நம் நாடு, நம் கொள்கை, நம் செல்வம், நம் கலை—இவை போன்ற அரிய பெரிய விஷயங்களைச் சிறுவருக்கு எந்த விதத்தில், எந்த அளவில் உணர்த்த முடியுமோ, அவ்வாறு செய்ய முயற்சிப்பதே எமது நோக்கம். பாலர் உலகில் தெய்வபக்தியையும் தேசபக்தியையும் புகட்டிவிட்டால், வருங்கால உலகில் நம்நாட்டின் மதிப்பைப் பன்மடங்கு தூக்கி வைக்கமுடியும். அன்பு, அறிவு, அறம், ஐசுவரியம்—யாவற்றிலும் சிறந்து விளங்கும் நம் நாடு என்றென்றும் உலகப் பிரஸித்தியுடன் விளங்குகிறது. வருங்காலத்தில் இன்னும் அதிக சோபையுடன் விளங்கவேண்டும். ஒரு கட்டடத்தை எவ்வளவு பெரிதாகவும் அழகாகவும்

கட்ட ஆசைப்படுகிறோமோ, அதற்குத் தகுந்த வாறு சரியான அஸ்திவாரம் அமைக்கவேண்டிய தவசியமல்லவா? அதேபோல் வருங்கால நாகரிகத்தின் மேன்மைக்கு இன்றைய பாலர் உலகில் சரியான அறிவுப் பயிற்சியை அஸ்திவாரமாக அமைக்கவேண்டும். அறிவு—அநுபவப்—படிக்கட்டுகள் மூலமாகத்தான் வாழ்க்கையின் மேல் மாடிக்கு ஏறமுடியும்.

பாலர்களுக்கு முதற்பாடமாகக் கற்பிக்கக் கூடியது தெய்வபக்திதான். கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்பதை உணரச்செய்த பின்பே மற்ற விஷயங்களைப் போதிக்கவேண்டும். (2) நல்ல சிந்தனையை ஏற்படுத்தவேண்டும் நல்லதையே எண்ணு; நல்லதையே செய். ஒருவருக்கும் தீங்கிழைக்காதே. பொறாமை என்ற துர்க்குணத்தை ஓட்டிவிடு—இவைகளையே அடுத்தபடியாக உணர்த்தவேண்டும். (3) மூன்றாவதாக, கல்வி அபிவிருத்தியின் அவசியத்தை உணரச் செய்ய வேண்டும். கல்வியோங்கவேண்டும்; நம் கலை வளரவேண்டும். (4). செல்வம் ஓங்கத் தொழில் புரியவேண்டும். சோம்பேறித்தனத்திற்கு இடமேயில்லை. கல்வியும் செல்வமும் ஓங்கினால்தான் நம் தேசமும் ஓங்கும். (5) தேச உயர்வுக்காகப் பணி புரிவதே பிறவியின் பயன் என்பதை உணர வேண்டும். இந்தப் புண்ணிய பூமியில் பிறப்ப

தற்கே எவ்வளவோ பாக்கியம் செய்திருக்கிறோம்; அதன் உயர்வுக்காக உழைக்க எவ்வளவோ கடமைப்பட்டிருக்கிறோம். நம் கடமையைச் சரிவரச் செய்து வீரத்துடன் தலை நிமிர்ந்தால்தான் நாளைய உலகம் நம் நாட்டை நன்கு மதிக்கும். (6) உலகத்தின் நன்மதிப்பை வெல்லும் சக்தி நமக்கு இருக்க வேண்டும். அன்பு, அறிவு, அறம்—யாவும் அதற்கு இன்றியமையாதது.

அறியவேண்டிய விஷயங்கள் அநேகம் என்பதைச் சுட்டிக்காட்டும் வழிகாட்டியாக அமைவதே பாலர் மோகினியின் பொறுப்பு. அறியாமை என்ற இருளை நீக்க ஒரு தீபத்தை ஏற்றிவிட்டால், ஒன்றிலிருந்து பல விளக்குகளை ஏற்றிக்கொண்டு ஒளியை அதிகரிக்கச் செய்வதுபோன்று அவரவர் ஞானத்தை அதிகரிக்கச் செய்து கொள்ளவேண்டும். வெறும் வேடிக்கைப் புத்தகமாகவோ, விளையாட்டுப் பத்திரிகையாகவோ வெளியிட முன்வரவில்லை; உபயோகமுள்ள, அறிவு வளர்ச்சிக்குரிய, விஷயங்களை அளிப்பதே நோக்கம்.

முதல் புத்தகத்திற்கு விஷயதானம் செய்துள்ள அறிஞர்களைப் பற்றியும், அவர்கள் எழுதியுள்ள விஷயங்களையும் இங்கே சுருக்கமாகக் குறிப்பிடுகிறேன் :

1. சுத்தானந்த பாரதியார்—தமிழுக்கும் தமிழருக்காகவும் தவம் செய்யும் கவி—யோகி. உங்களுக்கு அருமையான விஷயங்களை அளித்துள்ளார். 9 வது பக்கத்திலுள்ள பாட்டைத் திரும்பத் திரும்பப் படித்து, அதன் ஸாரத்தைக் கிரஹித்துக்கொள்ளுங்கள். சிறந்த வாழ்க்கை என்றால் என்னவென்று புரியும். "நாராயணா சரண்" தெய்வபக்தியைப் புகட்டும். "நம் தாத்தா" நம் தலைவரிடம் பக்தியை யூட்டும். "புலியும் கிலியும்" புத்தியைக் கொடுக்கும். "விலங்கு நூல்" உயிர் எத்தகைய, எவ்வகைய தினுசுள்ளது என்பதைத் தெரிவிக்கும்.

2. ப்ர. ப. அண்ணங்கராச்சாரியர் ஸ்வாமி—ஸ்ரீவைஷ்ணவ ஞானதீபத்தைப் பல பாஷைகளில் பரவச்செய்யும் மகா ஞானி. ஒரு வியாசமும் ஒரு நீதிக்கதையும் அளித்துள்ளார்.

3. பி. ஸ்ரீ. ஆசார்யா—கம்பன் கவிதா ரஸத்தையும், ப்ரபந்த ஸாரத்தையும் தமிழர் அறியச் செய்யும் கலாநிதி. ஒவ்வொருவரும் படித்து அறியவேண்டிய ஒரு இலக்கியம், ஒரு ஸ்தலம், ஒரு ஞானி—ஆகிய மூன்று முக்கிய பாரதச் செல்வங்களைக் குறித்து மூன்று கட்டுரைகள் அளித்திருக்கிறார்.

4. காப்டன் சேஷாத்திரிநாதன்—அணு ஜீவன்களைப்பற்றி பலதரப்பட்ட ஆராய்ச்சி செய்

துள்ள பிரபல டாக்டர். உங்களுக்கு, மிகவும் ரஸமான கதை முறையில் சின்னம்மை முதலிய அம்மைகள் பரவுவதைப்பற்றித் தமாஷாகத் தெரிவித்து, சுகாதார முறைகளைப் போதிக்கிறார்.

5. சூடாமணி—குழந்தைகளின் நண்பன் என்று இருபது வருடகாலமாகப் பிரஸித்தி பெற்றுள்ள கவி. குழந்தைகளுக்கென்றே குட்டிப் பாட்டுகளும் கதைகளும் சிருஷ்டித்து, தமிழ் நாட்டை மகிழ்வித்துள்ள நிபுணர். ஒரு வியாசமும், இரு சிறு கதைகளும் எழுதியிருக்கிறார்.

6. வை. மு. கோ.—கைதியின் கதை என்ற தொடர் மூலமாகப் பல படிப்பினைகளை வெளியிடுகிறார்.

7. ஏ. வி. ராகவன்—ஜகன்மோகினியின் சித்திர நிபுணர். உங்களுக்குப் பல படங்களையும் சித்திர அலங்காரங்களையும் அளித்து மகிழச் செய்கிறார். ஒரு விஷயத்தைப்படித்துத் தெரிந்துக் கொள்வது தவிர, படத்தில் பார்த்தால் மனத்தில் நன்கு பதியுமல்லவா? இத்துறையில் பெருந் தொண்டு புரிந்திருக்கிறார்.

செல்வக் குழந்தையே! இம் முதல் புத்தகத்தில் ஏதேனும் சில விடங்களில் வார்த்தைகள் கடினமாயிருந்து புரியவில்லை யென்றால் உன் வீட்டில் பெரியவர்களைக் கேட்டுத் தெரிந்து

கொள்ளு. பள்ளிக்கூடத்தில் வாத்தியார் எப்படியோ, அந்த ஸ்தானத்தில் உன் வீட்டில் உன் அக்கா, அண்ணன், அம்மா, அப்பா, தாத்தா முதலியவர்களிருக்கிறார்களல்லவா? அவர்களிடமே நீ சந்தேகங்களை நிவர்த்தி செய்துகொள்ள வேண்டும். புத்தகம் முழுதும் படித்தான பிறகு அதிலிருந்து கிரகித்துக்கொண்ட நீதிகளை எழுதி வைத்துக்கொள். இரண்டாவது புத்தகத்தை ஆவலுடன் எதிர்பார். சீக்கிரமே வரும். உனக்கு என்ன எழுதவேண்டுமென்று தோன்றுகிறதோ அதை எனக்குத் தெரிவி. அன்புடன் காத்திருக்கிறேன்.

பாலர்களின் அறிவு வளர்ச்சிக்கென்றே தோன்றியுள்ள இம்மலருக்கு விஷயதானம் செய்துள்ள பேரறிஞர்களெல்லோருக்கும் என் வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இம் முதல் புத்தகம் உனக்குப் பிடித்திருக்கிறதா? நீ இதை எவ் விதம் ரஸித்தாய் என்பதை எனக்கு எழுது. உன் கைப்பட கடிதம் வந்தால் எனக்கு ரொம்பவும் சந்தோஷமேற்படும். பயப்படாமல் எழுது.

அன்பு. அன்பு.

வை. மு. ஸ்ரீ.

சிறந்த வாழ்க்கை

ராகம் : காபி　　　　　　　　　　　　தாளம் : ரூபகம்

வறுமையற்ற வாழ்க்கையும்
வரம்பிலாத ஈகையும்
சிறுமை யற்ற சிந்தையும்
சிறந்த தேச சேவையும்,
பொறுமையுற்ற வீறுடன்
பொருமை யற்ற நேயமும்
திறமை யுற்ற சொல்லுடன்
சிறந்து வாழ்க மானிடர்.

சூதிலாத் தொழில்களும்
சுரண்ட லற்ற வணிகமும்,
கோதிலாக் குணங்களும்,
குறையிலா வளங்களும்,
தீதிலாப் பொறிகளும்,
திருமிகுங் கலைகளும்,
வாதிலாச்சன் மார்க்கமும்,
வளர்க மாந்தர் வாழ்கவே!

காலத்தின் போக்கு

முற்காலத்தில் நன்மைகள் மிகுந்திருந் தனவென்றும் தற்காலத்தில் தீமைகளே மிகு கின்றனவென்றும் ஆகவே முற்காலமே மேற் பட்டதென்பது பலருடைய கொள்கையாகக் காண்கிறது. கலி முற்ற முற்றப் பாவங்களும் முற்றுகின்றனவென்கிற கொள்கை உண்மை யாகவே இருக்கட்டும்; அதைப்பற்றி நாம் இப் போது ஒன்றும் சொல்லவரவில்லை. பொதுவில் முற்காலத்தைவிட இக்காலத்திலேயே நன் மைகள் அதிகம் என்று சொல்வதற்குத் தட் டில்லையென்று தோன்றுகின்றது.

முற்காலத்தில் ஸகலவித ஸாதனங்களும் மிகவும் அருமைப்பட்டிருந்தன. தற்காலத்தி லோவெனில் அந்த வருத்தம் அறவேயொழிந்த தெனலாம். முதலில் படிப்புக்கு வேண்டிய ஸாதனங்களை யெடுத்துக்கொள்வோம். புஸ்த கங்கள் கிடைப்பது முற்காலத்தில் மிகவும் அரிது. ஸ்ரீ ராமாயணம் மஹாபாரதம் ஸ்ரீ பாக வதம் போன்ற புத்தகங்கள் ஒரு ஊருக்கு ஒரு ஸ்ரீ கோசம் கிடைப்பது மிக அரிதாயிருக்கும். படித்தவர்களும் முற்காலத்தில் மிகக் குறை வாகவேயிருந்தனர். அஸ்தமித்த பிறகு புஸ்த கம் பார்ப்பதற்கு எவ்வளவோ சிரமம். இவ்

வகையான கஷ்டங்களெல்லாம் இக்காலத்தில் சிறிதுமில்லையென்பது அனைவர்க்கும் அநுபவ ஸித்தம். பாடசாலைகளும் பண்டிதர்களும் புஸ்தகஸாமக்ரிகளும் மற்றும் பல்வகையான ஸௌகரியங்களும் மலிந்திருப்பது இக் காலத்திலேயன்றி முற்காலத்திலில்லை யென்னத் தட்டில்லை.

இப்படியே மற்று எந்த விஷயத்திலும் பார்க்கலாம். திவ்ய க்ஷேத்ர தீர்த்தங்கள் ஸேவிக்கவேணுமென்றால் அதற்காக முற்காலத்தவர்கள் பட்ட சிரமம் வாசாமகோசரம். இக்காலத்திலோவென்னில், இன்று நினைத்தால் நாளை காலை ஸேதுஸ்நானம். வதரியோ துவரையோ எந்தக்ஷேத்திரமும் மணிக்கணக்கில் கண்டு மீளலாம்படியான ஸௌகர்யாதிசயங்கள் பல பல.

இங்ஙனே முற்காலத்திலும் தற்காலத்து நன்மைகள்எவ்வளவோமேம்பட்டவையென்று மகிழுங்காலம். இத்தகைய மகிழ்ச்சியை தெய்வம் ஸஹிக்கமாட்டிற்றிலது போலும். ஒவ்வொரு நிமிஷத்திலும் நமது காதில் விழும் செய்திகளும், பத்திரிகைகளில் நாம் காணும் செய்திகளும் மிகவும் பயங்கரமாயிருக்கின்றன. தெய்வத்தின் சீற்றம் எல்லை கடந்து செல்வதாகவே தெரிகின்றது. ஜகதுபஸம்ஹாரம் செய்

யவே எம்பெருமான் ஸங்கல்பித்திருக்கிறபடி யோ! என்றும் பெரியார்கள் சங்கிக்கின்றார்கள். நிகழ்காலத்துச் செய்தியையே நன்கு அறிய கில்லாத நாம் எதிர்காலத்துச் செய்திகளை எங்ஙனம் அறியகிற்போம்!

மேன்மேலும் பலவழிகளிலும் பலவகையான ஸௌகர்யாதிசயங்களைப் பெறப்போகிறோமென்று களித்திருக்கையில் உள்ள ஸௌகர்யங்களையுமிழந்து பரிதபிக்கும்படியான கொடிய ஸம்பவம் எதிர்பாராமல் நேர்ந்து கொண்டிருக்கின்றது. எம்பெருமான் திருவுள்ளம் கனியவேணும்! ப்ரஸந்நமாகவேணும்! நிக்ரஹம் நீங்கி அநுக்ரகம் பொலியவேணும்! என்று உள்ளூற ப்ரார்த்திப்பது தவிர வேறு யாதறிவோம் யாம்?

கதையின் கதை

அழகு என்பதே அழியாத ஆனந்தம். அழகான சித்திரங்கள் பார்க்கப் பார்க்க ஆனந்தம். கல்லிலே செதுக்கின அழகான சிலையுருவம் காணக்காண ஆனந்தம். இன்பமயமான கீதம் கேட்கக் கேட்க ஆனந்தம். அழகிலே மூழ்கிக் கிடக்கும் ஆத்மாவின் ஆனந்தம் அளவற்றது. அந்த ஆனந்தப் பரவசமடைவதற்காகத்தான் மனுஷன் சித்திரம், சிற்பம், சங்கீதம் முதலிய நற்கலைகளை வளர்க்கிறான்.

இந்த நற்கலைகளிலே சேர்ந்தது கதை. என்றாலும், ரசமான கதை கேட்கக் கேட்க ஆனந்தம். ஆனந்தம் தருவது அழகு என்றால் கதையும் அழகைத் தான் வெளியிடுகிறது.

ஆனந்தம் தருவதும் ஆத்மா உலகிலேவாழ ஊக்கம் அளிப்பதும் கதைகளின் முக்கியமான நோக்கம். வாழ்க்கைச் சிக்கனத்தில் கதைக்கு அமைந்த நிலையும் ஆனந்தம் தருவதேயாம்.

கதை சொல்வதும் கதை எழுதுவதும் கலைதான். குழந்தை உள்ளத்திற்குமுன் ஓயாமல் அழகைக் காட்டி, அந்த உள்ளத்திலே புதிய புதிய ஆசைகளை எழுப்பிப் புதிய புதிய வாழ்க்கை இலக்ஷியங்களுக்கு ஆளாக்கி ஆத்மாவை வளர்ப்பது தான் குழந்தைகளுக்குக் கதை சொல்லுவதின் உத்தேசம். இந்த மகத்தான உத்தேசம் குழந்தைகளுக்குச் சொல்லும் கதைகளிலே மறைந்து

இருந்தபோதிலும், வெளிப் பார்வைக்குப் பொழுது போக்குதலே அதன் உத்தேசமாகக் காணப்படுகிறது. நாடகமேடைபோலப் பார்ப் பதற்கும் கேட்பதற்கும் ரசமானது கதை. கதை சொல்லுகிறவனுடைய முகபாவனையும், கதை யிலே ஈடுபட்ட அவன் குரலும் குழந்தைக்கு நாட கம் பார்க்கும் இன்பத்தையே கொடுக்கிறது.

குழந்தைக்கதைகளின் முதலாவது நோக்கம் குழந்தையைச் சந்தோஷப்படுத்துவதுதான்; கதை களின் மூலமாகப் புகட்டவேண்டியவைகளை யெல்லாம் புகட்டுவது அன்று முதல் நோக்கம். சொல்லுகிற கதைகள் எப்படி நாடகமேடை போலக் குழந்தைக்குப் பொழுது போக்காக இருக்கிறதோ அப்படியே, அழகிய படங்களோடு அச்சிடப்படும் கதைப் புத்தகங்களும் குழந்தைக் குப் பொழுதுபோக்காகவே இருக்கிறது.

குழந்தைக்குக் கதை சொல்லுகிறவனும், கதை எழுதுகிறவனும், பொழுது போக்கென்று கேட்கிற குழந்தையின், அல்லது கதை படிக்கிற குழந்தையின் உள்ளத்திலே ஏற்கெ னவே புகுந்திருக்கிற விஷயங்களோடு, தான் சொல்லும் அல்லது எழுதும் கதையின் மூலமா கப் புதிய விஷயம் ஒன்றை அறிந்தோ அறியா மலோ புகுத்திவிடலாம். குழந்தைகளுக்குள் அடங் கிக்கிடக்கிற ஆத்மசக்திகளை ஒவ்வொன்றாக

எழுப்பிவிடாமல் குழந்தைக் கதைகளைச் சொல்லவும் முடியாது, எழுதவும் முடியாது.

உடலிலே ஐம்புலன்கள் உண்டு. கைகால்களிலே சதைகள் உண்டு. எலும்பு நரம்புகள் உண்டு. இவைகள் எல்லாம் ஏற்றத் தாழ்ச்சி இல்லாமல் சரியான அளவிலே வளரும் வளர்ச்சிதான் உடலின் பூரணவளர்ச்சி எனப்படும். அப்படியே உடலுக்குள்ளே வாசம் பண்ணுகிற ஆத்மா வளரவேண்டுமானால், மனக்கண் நன்றாய்ப் பார்க்கப் பழகவேணும், கற்பனைக் கதவுகள் நன்றாய்த் திறக்கவேணும். உணர்ச்சி ஊற்றுக்கள் தேவையான இடங்களிலே பாயவேணும்; வாழ்க்கை இலக்ஷியங்கள் அழகான நிறங்களிலே மலரவேணும். இந்த வளர்ச்சிக்காகக் கதை சொல்லுகிறவனும், கதை எழுதுகிறவனும் குழந்தைக் கதைகளிலே அறிந்தோ அறியாமலோ, சில விஷயங்களைப் புகுத்திவிடுகிறான். கதைகளின் மூலமாகக் குழந்தையின் ஆத்மிக அநுபவங்களைச் செழிப்பாக்கி அகலச் செய்வதோடு, வாழ்க்கையில் ஏற்படும் சம்பவங்களுக்குக் குழந்தையை ஆயத்தப்படுத்தி விடுகிறோம்.

கதை படிப்பதுதான் இதர விஷயங்களிலிருந்து மூளையை இளைப்பாறச் செய்வது. ஒன்றிலேயே ஊன்றி நின்று களைத்துப்போன மூளைக்

கும் மனத்திற்கும் சிறந்த இளைப்பாறுதல் தரு வது கதைதான். ஒரு விஷயத்திலே ஆழ்ந்து சிந் தித்துக் கொண்டிருந்த மனத்தைப் புதிதாய் ஒரு விஷயத்திற்குள்ளே புதிய ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் புகும்படிச் செய்யவேண்டு மானால், இடையிலே படிக்கிற அல்லது கேட்கிற ரசமான கதை பேருதவியாக இருக்கிறது.

கதையைப் போலக் குழந்தை உலகத்திற் குள் பிரவேசிக்கத்தகுந்த வாசல் வேறொன்றுமே இல்லை. உபாத்தியாயருக்கும் குழந்தைகளுக்கும், பெற்றோருக்கும் குழந்தைகளுக்கும், பெரியவர் களுக்கும் குழந்தைகளுக்கும் நெருங்கின பாந்த வியம் ஏற்படச்செய்வது கதைதான். குழந்தை களுடைய கவனத்தை வெகு சீக்கிரம் கவருவது கதைதான். பராக்காகத் திரிகிற குழந்தை உள் ளத்தைக் கட்டிநிறுத்தும் கட்டுத்தறி கதைதான். பாராமுகமாக இருக்கும் குழந்தையின் பார்வை யோடு உள்ளத்தையும் கவர்ந்து விடுவார்கள் கதை சொல்லுவதிலே வல்லவர்கள். பயந்து ஒளிந்து ஓடும் குழந்தையை மடிமேல் வந்து இருந்து கொஞ்சிக் கொஞ்சி விளையாடும்படிச் செய்துவிடுவார்கள் ரசமாகக் குழந்தைகளுக் குக் கதைசொல்லப் பழகினவர்கள்.

(தொடரும்)

நாராயண சரண்

தெய்வபக்தியே குழந்தைகளுக்கு முதற்பாடமாக அமையவேண்டும்.

நாராயண என்றால் அப்பா நாக்கை அறுத்து விடுவார். அவருக்குச் சாமிபெயர் பிடிக்காது. "இரண்யா சரண்" என்று தன் பெயரையே எல்லாரும் சொல்லவேண்டும். ஊரெல்லாம் பயந்து அப்படிச் செய்தது. பள்ளிக்கூட வாத்தியாரும் "இரண்யாசரண்" சொல்லச் சொன்னார். பிரகலாதன், நாராயணசரண் என்றே தைரியமாகச் சொன்னான்.

"பயலே! வாத்தியார் சொன்னபடி சொல்" என்றார் அப்பா. "அப்பாவுக்கும் பயமில்லை ஆசானுக்கும் பயமில்லை... நாராயண சரண்" என்றான் சிறுவன். முரட்டு நாஸ்திக அப்பா, அவனை அடித்தார், மிரட்டினார், விஷங்கொடுத்தார், மதயானையை விட்டுக் கொல்லத்தூண்டினார். வாளை உருவினார்...யானை பக்தனை வணங்கியது. பிரகலாதன் அப்போது இந்தப் பாட்டைப் பாடினான்...நீங்களும் பாடுங்கள் பார்ப்போம்...பாடும்போதே நெஞ்சில் நாராயணனை நினையுங்கள். அவன் உங்களுக்கு எல்லா நன்மையுந் தருவான்...

பயப்பட மாட்டேன்

மோகன ராகம் ஜம்பை தாளம்

ஊருக்குப் பயப்பட மாட்டேன்
உலகுக்கும் பயப்பட மாட்டேன்
ஆருக்கும் பயப்பட மாட்டேன்
ஆதி நாராயணு என்பேன் !

அப்பாவுக்கும் பயமில்லை,
ஆசானுக்கும் பயமில்லை,
எப்போதும் "ஹரி ஹரி" என்பேன்
எமனுக்கும் பயப்பட மாட்டேன் !



நஞ்சுக்கும் பயப்பட மாட்டேன்
நாராயணசரண் என்பேன்
அஞ்சாமல் யானைமுன் நிற்பேன்.
அடித்தாலும் பயப்பட மாட்டேன் !

ஆளுக்கும் பயப்பட மாட்டேன்
அரசுக்கும் பயப்பட மாட்டேன்.
வாளுக்கும் பயப்பட மாட்டேன்
''வாசுதேவா ஹரி'' என்பேன் !

நெஞ்சில் இருக்கும் கடவுள்,
நேரில் இருக்கும் கடவுள்
அஞ்சல் அளிக்கும் கடவுள்
அன்பரைக் கைவிட மாட்டார்...

பாரதத் தாயின் தவப் புதல்வர்கள்



1. நம் தாத்தா

இளஞ்சிங்கங்காள், நமது நாட்டில் ஒரு தாத்தா இருக்கிறாரே தெரியுமா? காந்திதாத்தா. அவர் லண்டனில் படித்தவர். தென்னாப்ரிக்காவில் பாரிஸ்டர் வேலைபார்த்து ஏராளமாகச் சம்பாதித்தவர். அங்கே நமது இந்தியக் கூலிகள் மிருகங்களைவிடக் கேவலமாக நடத்தப்பட்டார்கள். நாளெல்லாம் வேலை; அப்படி இப்படி திரும்பினால் வசவு, அடி. கூலி கொஞ்சம். கூலிகள் கறுப்பு மனிதர்களாம்; வெள்ளைக்காரத் தெருவிலே, ஓட்டல்களிலே வரமுடியாது. கூலிகளின் துயரை ஒழிக்க நமது தாத்தா சத்தியாக்கிரகப்போர் புரிந்தார். சத்தியாக்கிரகம் என்றால் உண்மையை உறுதியாகக் காப்பது. மெய்யை மெய்யென்றுசொல்லிப்

பொய்யைக் கண்டிப்பது. உள்ளத்தைச்சொன்ஞல் பலருக்கு உடம்பெரிச்சல்தானே. "ஐயா! மனிதரெல்லாரும் ஒன்றுதானே. தோல் கறுப்பாஞலென்ன, உயிரும் கறுப்பா? வெள்ளைத் தோலுக்கு வெள்ளை உயிரா? எங்களையும் சமமாக நடத்துங்கள்" என்ருர் காந்தி. "முடியாது" என்று வெள்ளைக்காரர் சட்டம்போட்டார்கள். காந்தி சாந்தமாக அதர்ம சட்டத்தை மீறினர். பலமுறை சிறைசென்ருர். முடிவில் வெள்ளைக்காரர் சமாதானம்செய்துகொண்டார்கள். காந்திதாத்தா பொதுஜனசேவைக்கே எல்லாவற்றையும் தியாகம் செய்தார். அவர் நமது தேசம் முன்னேற ஓயாது பாடுபடுகிருர். குடுகுடு தாத்தாவான அவர் இன்றும் ஜவானைப் போல் நடக்கிருர்.

தினம் இராட்டினம் சுற்றுகிருர். வார்தாவுக்கு அருகே அவருடைய சேவாசிரமம் இருக்கிறது. அங்கே பல தொழில்கள் நடக்கின்றன. பள்ளிக்கூடம் நடக்கிறது. எல்லாரும் நூற்கிருர்கள், தறி நெய்கிருர்கள், தெய்வத்தை பிரார்த்தனை செய்கிருர்கள். தாத்தா சொன்னபடி ஒழுங்காக நடக்கிருர்கள். நீங்களும் அப்படி நடப்பீர்களா? எங்கே இந்தத் தாத்தா பாட்டை கிணீர் என்று பாடி ஆட்டம் போடுங்கள் பார்ப்போம்.

தாத்தா பாட்டு

ஆனந்தபைரவி ராகம் **ஆதி தாளம்**

தேசத்தில் பெரிய தாத்தா—நாங்கள்
தெய்வமெனக் கொண்டாடும் தாத்தா
நேசத்திலே பெரிய தாத்தா—கொண்ட
நினைப்பைச் செய்து முடிக்கும் தாத்தா

கூனிக் குறுகியிருந்தாலும்—இளங்
குமரன் என்றும் எங்கள் தாத்தா
வானக் கருமுகிலைப்போலே—எங்கள்
வாழ்வு தழைக்கவந்த தாத்தா

கோலைப் பிடித்து நடந்தாலும்—தர்மக்
கோட்டையைக் காத்துநிற்கும் தாத்தா
காலைபோல் சாந்தமுள்ள தாத்தா—நாட்டுக்
கவலை துடைத்தருளும் தாத்தா

"எத்தனை ஜன்மங்கள் வந்து பிறந்தாலும் இந்திய மண்ணிடை வேண்டுவனே" என்கிறார் அஹிம்ஸாமூர்த்தியான காந்திமகான். காந்தியுகத்தில் பிறந்திருக்கும் நாம் மகா பாக்யசாலிகள். உலகெங்கும் இந்தியாவின் புகழ் பரவியிருப்பது காந்தியினால்தான்; "காந்தியின் நாடு" என்றால் தெரியாதவர் கிடையாது.

சீமையிலே படித்த தாத்தா—பெருஞ்
செல்வத் தொழில் புரிந்த தாத்தா
தீமை அழிய நன்மை பொங்க—மிகச்
சிறுக வாழுகின்ற தாத்தா

பஞ்சடித்து ராட்டினத்தில் நூற்றே—தொழிற்
பாடம் புகட்டுகின்ற தாத்தா
துஞ்சா முயற்சியுள்ள தாத்தா—ஒரு
சொல்லால் உலகை வெல்லும் தாத்தா

அஞ்சாத நெஞ்சுடைய தாத்தா—உண்மை
அஹிம்ஸை விரதங்கொண்ட தாத்தா
வஞ்சமில்லாத காந்தித் தாத்தா—அவர்
வாழ்வே கீதையெனலாமே

நடந்த கதையைக் கேள்

1. புலியும் கிளியும்.

குருகோவிந்தன் மகா சூரன், அவன் பெரிய பலசாலி. பெரிய தேசபக்தன். தேசதர்மத்தைக் காப்பாற்ற அவன் ஒரு பெரிய வீரர் படையைச் சேர்த்தான். "எமனுக்கும் பயப்படாமல் எந்த அபாயத்தையும் எதிர்த்து தேசசேவை செய்ய வேண்டும்" என்று வீரருக்குச் சொன்னான்...வீரர் "ஆஹா! அப்படியே அஞ்சாமல் நிற்போம்..." என்று மார் தட்டினார்கள்.

ஒருநாள் குருகோவிந்தன் வீரரையெல்லாம் கூட்டினான். ஒரு வேங்கைப்புலியைக் கொண்டுவந்து அவர்கள் முன்னே நிறுத்தினான். "வீரர்களே! இந்தப் புலியை அவிழ்த்து விடப்போகிறேன். நீங்கள் அதைப் பிடித்துக் கொண்டு வரவேண்டும்...எங்கே பார்ப்போம்..." என்று புலியை சூ என்று முன்னே விட்டான். புலி, வீரர் கூட்டத்திற் புகுந்தது.



"ஐயோ புலி! புலி! செத்தேன்...ஐயோ!" என்று வீரப்புலிகள் ஆளுக்கொரு மூலையாகக் கிலி பிடித்து ஓடினார்கள். கூட்டம் நெல்லிக்காய் மூட்டையானது.

புலி நாலுமூலையும் ஓடித்துரத்தியது. எல்லாரும் சுவரிலும் மரத்திலும் ஏறிக் கொண்டு "ஐயோ புலி" என்று கூக்குரலிட்டார்கள்...

தர்மதேவ் என்ற ஒரு வீரனே புலியைத் துரத்திச் சென்று கட்டிப்பிடித்தான்..."ஐயோ! செத்தாய் தர்மா!" என்று எல்லாரும் அலறினர். "தர்மம் சாகாது"...என்று வீரன் புலியைக் கொண்டுவந்து குரு முன் நிறுத்தினான். குரு புலியைக் கட்டிப் போட்டார்.

பிறகுதான் வீரப்புலிகளெல்லாம் மரத்தினின்றும் சுவரிலிருந்தும் 'தொப்தொப்' என்று குதித்து வந்தனர். "கோழைகளே! என்

கழுதையின் நடையையும் ஓட்டத் தையும் கவனியாது புலித் தோலைக் கண்டு நடுங்கியவர்கள் இப்போது சிரிக்கிறார்கள்! புலியில்லை; கிலியில்லை.

இப்படிப் பயந்து சாகிறீர்கள்? முன்னே அபா யத்திற்கு அஞ்சோம் என்று மார்த்தட்டினீர் களே...புலியைக் கண்டு கிலிபிடித்தோடிய தேன்?...கோழைகளே பாருங்கள் புலியை..." என்று குரு ஒரு சுருக்குமுடிச்சை அவிழ்த்துப் புலித்தோலை நீக்கினார்...

"ஹ ஹ! கழுதை கழுதை! இதற்கா பயந்தோம்!" என்று எல்லாரும் கைதட்டி வெட்கினார்கள். குட்டிக்கழுதையும் "வாழ் வாழ்... தைரியமாக வாழ்" என்று குருவை வாழ்த்தியது...பயந்தாங் குள்ளிகளை "வீழ் வீழ்" என்று கேலிசெய்தது. குருகோவிந்தன் தர்மதேவனுக்குப் படைத்தலைமை தந்தான்...

"கிலியில்லாவிட்டால் புலியில்லை..." என் றான் குரு.

விலங்கு நூல்

உயிர் ஒன்றுதான். ஆனால் உருவம், உணவு, உணர்ச்சி, அறிவு, சக்தி யாவும் வேறு. படிக்கப் படிக்க ரஸமானது.

1. எத்தனையோ உயிர்கள்!

விடுமுறை நாளில் வீடு தூமிசம்! ராமு அப்படி விஷமம் செய்வான்! பாத்திரம் பண்டமெல்லாம் ஜலதரங்கமடிக்கும். சர்க்கரைப் பண்டங்களில் கையைப் போடுவான். பட்சணங்கள் கீழே சிந்தும்; ஈ எறும்பு மொய்க்கும். எலிவரும், எலியைத் துரத்தப் பூனைவரும்; நாய் ஓடிவரும்; ராமு கல்லெறிவான். ராமு ஈ எறும்பு பூச்சி புழுக்களை நசுக்குவான்; தங்கை காமு "சீ! அப்பா! உயிர்களைக்கொன்றால் பாபம்! என்று தடுப்பாள். "உனக்கென்னடீ; அப்படித்தான் செய்வேன்" என்று கிள்ளுவான். "உன்னைக் கிள்ளினால்!" என்று காமுவும் மெல்ல..."ஐயோ வலிக்கிறதே" என்பான் ராமு. பார் உன்னைத் தொட்டால் 'ஹா' என்கிறாயே; உன்னைப்போலத்தானே மற்ற உயிர்களுக்கும் வலிக்கும்" என்பாள் காமு. ஒருநாள் ராமு பட்சணத்தைக் காட்டி "தோதோ" என்று நாயைக்கூப்பிட்டான்; நாய்வாலாட்டிக்கொண்டு ஆவலாய்வந்தது. கல்லெடுத்து அடிக்கப்போனான்.

காமு "சீ ஆகாதப்பா!" என்று கையை கெட்டி யாகப் பிடித்துக்கொண்டு, தன் மடியிலிருந்த பட்சணத்தை நாய்க்குப் போட்டாள். அப்பா இதைப் பார்த்தார். "சபாஷ் காமு! நீ சமர்த்து; ராமு அசடு" என்றார். நாய் வாலாட்டிக் கொண்டே சந்தோஷமாகக் காமு பக்கம் வந்து நின்றது. ராமுவுக்குப் பொறுமை வந்துவிட்டது.

ராமு:—எம்பா நானு அசடு! நாயை அடித் தால் என்ன?

அப்பா:—உன்னை அடித்தாலென்ன? உன் மேல் கல் எறியட்டுமா?

ராமு:—அப்பாடீ வலிக்கும்.

அப்பா:—அப்படித்தான் அதற்கும் வலிக் கும்! நீ ஊழ் ஊழ் என்று அழுவாய். அது வாள் வாள் என்று அழும்.

காமு:—ஈ எறும்புகூட அப்படித்தானே.

ராமு:—ஈ எறும்பு அப்படி அழவில்லையே அவற்றை நசுக்கினால்...

அப்பா:—அவையும் அழும், துடிக்கும், ஒரு எறும்பை நசுக்கலாம். ஒரு எறும்பை உண்டாக்க யாரால் முடியும்?

காமு:—செடிகொடிகளைக்கூட நாம் வருத் தக்கூடாது.

ராமு:—போடீ பைத்தியம்! செடி வெறும் ஜடம்! அதற்கு வலிக்காதே.

அப்பா:—அப்படியில்லை ராமு; செடிகொடி களுக்கும் உயிருண்டு.

ராமு:—இன்னும் எதற்கெல்லாம் உயிருண்டு?

அப்பா:—உடலெடுத்து வாழும் கோடிக் கோடி உயிர்கள் உண்டு.

காமு:—அப்பா! இப்படிச் சொன்னால் அவனுக்குத் தெரியாது. நாம் மீன்சாலைக்கும் மிருகச் சாலைக்கும் போவோம். நேரே காட்டினால் அவனுக்குத் தெரியும்.

அப்பா:—நல்லது, செல்வோம். ராமு! வா எங்களுடன்...காட்சி சாலை பார்க்க ராமு தயார்! அப்பா, காமு, ராமு மூன்றுபேரும் முதலில் கடற்கரையைப் பார்த்துவிட்டு, மீன் சாலைக்குப் (அக்வேரியம்) போனார்கள்; பிறகு விலங்குச் சாலை (Zoo) பார்த்தார்கள்... ஏழுமணிக்குத் திரும்பி வந்தார்கள். "நம்மைப்போல் எத்தனை உயிர்களப்பா!" என்று ராமு ஆச்சரியப்பட்டான்.

காமு :—அப்பா, எங்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது; நம்மைப்போலே எத்தனையோ உயிர்கள் உலகத்தில் வசிக்கின்றன; எத்தனை வகை! ஒவ்வொன்றுக்கும் தனித்தனி உருவம், உணவு, பழக்கவழக்கம் உண்டு.

ராமு :—தனித்தனி இல்லையடி; அடித்தால் கிள்ளினால் எல்லாருக்குமே வலிக்கும்; எல்லா உயிரும் ஒன்றுதானே அப்பா!

மிருகங்களின் வாழ்க்கையைப் பற்றி அறிய குழந்தைகளுக்கு மிகவும் இஷ்டமென்பதால் கவியோகி பாரதியார் விலங்கு நூல் தொடங்கியிருக்கிறார்.

அப்பா:—உயிரெல்லாம் ஒன்றே, உடல்கள் பலவகை, அறிவு பலவகை. நாம் மனிதர், படிக்கிறோம், நினைக்கிறோம், அறிகிறோம், கடவுளை நம்புகிறோம், உயிர்களுக்கு இரங்குகிறோம். மற்றப் பிராணிகளெல்லாம் விலங்குகள். அவை உண்ணும், உறங்கும், மூச்சுவிடும், பார்க்கும், கேட்கும், காயம்பட்டால் உயிர் துடிக்கும்.

ராமு:—எல்லாமே அப்படியா? மரமும்உயிர் தானே; அது பார்க்காது, கேட்காதே.

அப்பா:—சில அப்படி; சில இப்படி; உயிர்களில் பலவகையுண்டு.

காமு:—எத்தனை, என்னென்ன அப்பா!... எனக்கு அறிய ஆசையாயிருக்கிறது.

அப்பா:—உயிர்களைப்பற்றிப் பெரிய பெரிய சாஸ்திரங்கள் உண்டு. மனிதரைப்பற்றிய சாஸ்திரம் மானிடநூல் (Physiology) இதை உடல் நூல் என்றும்சொல்வார்கள். செடிகளைப்பற்றிய சாஸ்திரம் செடிநூல் (Botany) விலங்குகளைப் பற்றியது விலங்கு நூல் (Zoology). நாளை உங்களுக்குப் படம் காட்டி விளக்குவேன்.

—தொடரும்

நம் செல்வம்

"செல்வம்" என்றால் பணம் என்று மட்டும் அர்த்தமல்ல. ஒரு சிறந்த இலக்கியமும் பெரும் செல்வந்தான். ஒரு புனித க்ஷேத்திரமும் நம் புண்ணியபூமியின் செல்வந்தான். அதேபோல் ஓர் நிகரற்ற பக்தமணியும் நம் நாட்டின் செல்வமே. இத்தகைய மூவிதச் செல்வங்களிலும் ஒவ்வொன்றைக் கீழே குறிப்பிடுகிறோம்.

கோதை தமிழ்

ராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள ஸ்ரீவில்லிபுத்தூரில் வாழ்ந்த பெரியாழ்வார் தமது நந்தவனத்திலே ஒரு நாள் துளஸிச் செடிகளுக்கிடையே ஒரு பெண் குழந்தையைக் கண்டெடுத்தார். இவளையே தமது புத்திரியாக ஸ்வீகரித்து வளர்த்து வந்தார். குழந்தைப் பருவம்முதல் இவளுடைய விளையாட்டே பக்தி மயமாக இருந்தது.

துளஸிச் செடிகளுக்குத் தண்ணீர் விடுவாள். பூஞ்செடிகளுக்குப் பக்குவம் செய்வாள். அவள் தந்தை மற்ற நந்தவன கைங்கரியங்களைச் செய்வார். அவள் பூக்கொய்வாள், பகவானுக்கு மாலை கட்டுவாள். பஜனைகளிலும் கலந்துகொள்வாள்: பக வானைப்பாடுவாள், ஆடுவாள். இப்படிப் பக்தியின் கொழுந்தாக வளர்ந்தாள் போலே! ஆம், இவளைத் தான் தமிழுலகம் கோதை என்று போற்றுகிறது.

பக்தி, பகவான்மீது காதலாக முதிர்ந்தது. பக வானுக்காக வைத்திருக்கும் பூமாலைகளைத் தனக்குத் தானே சூட்டி அழகு பார்த்துக்கொண்டு தந்தைக்குத் தெரியாமலே வைத்து விடுவாள். இப்படி இவள் சூடிக்கொடுத்ததை பகவான் திருவுள்ளம் உவந்து ஏற் றுக்கொண்டார். "இவ்வளவு பக்தி நமக்கும் இல் லையே!" என்று அதிசயித்த பெரியாழ்வார் "என்னை ஆண்டாள் இவள்" என்று தன்னருமைத் திருமகளைத் தழுவிக் கொண்டார். பகவானுக்கே பூமாலைச் சூடிக் கொடுத்ததால் இவளைச் சூடிக்கொடுத்த சுடர்க்கொடி என்றும் சொல்வதுண்டு.

கோதா பிராட்டியின் மீது ஸ்ரீ வேதாந்த தேசிகர் பாடியுள்ள **ஸ்ரீ கோதாஸ்துதி** ஒவ்வொருவரும் படித் து அறியவேண்டிய மகாரத்தினம்.

பகவானுக்குப் பூமாலை சூடிக் கொடுக்கவும், பாமாலை பாடிக்கொடுக்கவும் பிறந்தவள்தான் இவள். அக்கோதை சூட்டிய பூமாலைகளின் அழகையும் மணத்தையும் நாம் அறியோம்; ஆனால் அவள் சூட்டிய பாமாலைகள் இன்றும் வாடாத மலர் மாலைகளாக இருக்கின்றன. பக்தர்கள்மட்டுமா பாராட்டுகிறார்கள்? தமிழறிஞர்களும் ரஸிகர்களும்கூட, "கோதை தமிழ்" என்று சிறப்பித்துப் பேசுகிறார்கள்.

கோதை தமிழில் திருப்பாவை என்ற பிரபந்தம் மிகவும் பிரஸித்தமானது. இதில் 30 பாசுரங்கள் உண்டு. இந்த 30 பாசுரங்கள்தான் மேலே சொன்ன செய்யுட் பகுதியில் "ஐந்நைந்தும் ஐந்தும்" ($5 \times 5 = 25 + 5 = 30$) என்று குறிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றையாவது தமிழ்ச் சிறுவர்களும் சிறுமிகளும் பாடம் செய்துகொள்வது அவசியமாகும்.

இந்த 30 பாசுரங்களைக்கூட அறிந்துகொள்ளாதவர்களின் அறியாமையைக் கண்டு பெரிதும் வருந்திய ஒரு பெரியார், "இவற்றைக்கூட அறிந்துகொள்ளாதவர்கள் பூமிக்குப் பாரந்தான்!" என்று பொருள்படப் பாடியிருக்கிறார்.



பதரிகாச்ரமத்தில் எழுந்தருளியுள்ள மூர்த்திகளை வடஇந்திய ஓவியங்கள் மேற்கண்டவாறு சித்திரிக்கின்றன. பதரி நாராயணனும் அரவிந்த வல்லித்தாயாரும் திருமங்கை மன்னனைப் பரவசத்திலாழ்த்தியதை பதரியைக் குறித்த அவரது பாசுரங்களிலிருந்து அறியலாம்.

பதரிகாச்ரமம்

நம் தாய் நாட்டின் வட எல்லையாகிய வெள்ளிப் பனிமலையில் பதரி என்று வடமொழியிலும் (வதரி என்று ஆழ்வார்களின் தமிழிலும்) பிரசித்தமாகச் சொல்லப்படும் பதரிகாச்ரமம் இருக்கிற தென்பதை அறியாதார் இல்லை. அங்கே கோயில் கொண்டிருக்கும் பதரீநாராயண மூர்த்தி குருசிஷ்யக்ரமத்தைக் காட்டுகிறார் என்பது ஐதிகம்.

நரனாகவும் நாராயணனாகவுமிருந்து, அதாவது சிஷ்யனாகவும் குருவாகவும் அமர்ந்து—குருசிஷ்ய முறை வெகு தெளிவாகக் காட்டியிருக்கிறார் பகவான் என்று சொல்லுகிறார்கள். இப்படி ஒரு பிறப்பில் குருசிஷ்யர்களாகயிருந்த நாராயணனும் நரனுமே, மஹாபாரத காலத்தில் கிருஷ்ணார்ஜுனர்களாகத் தோன்றினார்கள். அப்பிறப்பில் பகவான் நாராயண மூர்த்தி பார்த்தஸாரதியாக இருந்து கீதாசாரியனாகவும் விளங்கி அர்ஜுனனுக்கு உபதேசம் செய்தருளினார்.

எதிரேயுள்ள படத்தில் நாரதருக்குப் பின்புறமாக, லக்ஷ்மிக்கு இடது பக்கத்திலுள்ள இரு விக்ரகங்கள்தான் நர, நாராயணமூர்த்திகள்.

பதரி நாராயணனுக்குத் திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம் செய்திருக்கிறார். மங்களம் உண் டாகும்படி வாழ்த்துவதைத்தான் மங்களாசாஸனம் என்பது. அப்படியானால், உங்களுக்கு இங்கே ஒரு சந்தேகம் ஏற்படுவது சகஜம். ''பகவானல்லவா பக்தரை வாழ்த்தவேண்டும்?'' என்று கேட்கலாம். அன்புப் பெருக்கினால் "நமக்கு அருள் செய்த இந்த அழகன் இப்படியே திவ்ய மங்களவிக்ரகமாக உலகத் திற்கெல்லாம் அருள் செய்துகொண்டிருக்கவேணும்' என்று வாழ்த்துவதும் பக்தி நிறைந்த மனோபாவம் தான்.

இந்த மனோபாவத்தோடு திருமங்கையாழ்வார் பதரீகாச்ரமத்தைப் பாடியிருக்கிறார். இக்காலம்போல் பிரயாண வசதிகளில்லாத கி. பி. 7ம் நூற்றாண்டிலும் திருமங்கை மன்னன் என்ற இந்த ஆழ்வார் ஓரளவு சில வசதிகளுடனே பதரிகாச்ரம யாத்திரைசெய்தார். வட நாட்டுத் திருப்பதிகளை யாத்திரை செய்துப் பாடிய இப்பெரியார், பதரீ நாராயணன் விஷயமாக விசேஷ மன உருகத்தோடு பாடி இருக்கிறார்.

வெள்ளிப் பனிமலையில் உள்ள இந்தத் திவ்ய க்ஷேத்திரத்தில் எம்பெருமான் அபூர்வமாக சேவை சாதிக்கிறார் என்பது படத்திலிருந்தே ஒருவாறு தெரியவருகிறதல்லவா?

இப்பாசுரங்களில், "இளமை நழுவி முதுமைவருவதற்கு முன்பே,—கூனிக்குறுகிக் கோலூன்றித் தள்ளாடி நடப்பதற்கு முன்பே—பதரீகாச்ரமம்போய் வணங்குவோம்" என்று பிறருக்கு உபதேசம் செய்கிறார். உதாரணமாக,

வண்டு தண்தேன் உண்டு வாழும்
வதரி வணங் குதுமே.

என்று சொல்வதைக் கேளுங்கள். பல வேறு பூக்களிலிருந்தும் ஸாரமாகிய தேனை உண்டு வாழும் வண்டுகள், பலவேறு சாஸ்திரங்களிலிருந்தும் ஸாரத்தைக் கிரகித்துக்கொண்டு வாழும் பக்தர்களுக்கு அறிகுறி என்பர். இத்தகைய பக்தர்கள் உகந்து செல்லும் புண்ணிய ஸ்தலம் பதரி என்பது கருத்து.

கோதை தமிழைப் படித்து இன்புறவேண்டியது நமது பண்பாட்டுக்கு எவ்வளவு அவசியமோ, அவ்வளவு அவசியமானது பதரிகாச்ரம யாத்திரையும் என்று கூறலாம்.

இக்காலத்தில்கூட பதரிகாச்ரம யாத்திரை செய்து களிப்போர் மிகச் சிலரே. ஏனெனில் இன்னும் அப்பிரதேச யாத்திரை சிறிது சிரமமாகவேயிருக்கிறது. முற்காலத்தைவிட இப்போது ஸௌகரியம் அதிகம்; வருங்காலத்தில்—நீங்கள் பெரியவர்களாகும்போது—வெகு சுலபமாகப் போய்வரமுடியும் புதியன வசதிகள் ஏற்படின்.

ஞானச்சுடர்

அருமறைகள் தமிழ்செய்தான் தாளேகொண்டு
துன்பற்ற மதுரகவி தோன்றக்காட்டும்
தொல்வழியே நல்வழிகள் துணிவார்கட்கே.

★

வேதமொரு நான்கினையும் மிக்கதமிழ் நாலடியால்
ஓதி உரைத் தேகருணை ஓங்கும் கை

★

யாழின் இசை வேதத்து இயல்.

வேதம் தமிழ் செய்தவர்

வேதம் எழுதியிருக்கும் புராதன பாஷை சம்ஸ்க்ருத பண்டிதர்களுக்கும் விளங்காத புராதன சம்ஸ்க்ருதம். வேதப் பொருளும் வேதஸாரமான நுட்பமான கருத்துக்களும் ஸம்ஸ்க்ருத ஆராய்ச்சியாளர்களுக்கும் எளிதில் விளங்குவதில்லை. எனவே, வேதம் தமிழிலும் தோன்ற வேண்டியது அவசியமாயிற்று. நம்மாழ்வார் மூலமாகத்தான் வேதம் தமிழிலே தோன்றியது என்பது பெரியோர் கருத்து.

வேதத்திலும் வேதாந்தத்திலும் ஏற்படக் கூடிய சந்தேகங்களையும் திவ்யப் பிரபந்தங்களின் உதவி கொண்டு தீர்த்துக் கொண்டதாக ஸ்ரீவேதாந்த தேசிகரும் ஒப்புக் கொண்டிருக்கிறார். ஸ்ரீ ராமானுஜர் தமது ஸ்ரீ பாஷ்யத்தையே நம்மாழ்வாரின் திருவாய்மொழியைத் தழுவி அமைத்திருக்கிறார் என்பது பிரஸித்தம்.

நம்மாழ்வார் பாடிய பிரபந்தங்களில் திருவாய்மொழி மிகவும் சிறந்தது. இதை சாமவேதஸாரம் என்கிறார்கள். வேதாந்தக் கொள்கைகள் இங்கே சந்தேகத்திற்கு இடமில்லாமல் தெளிவாகவிளக்கப் பட்டுள்ளன.

திருவாய்மொழியை "யாழின் இசை வேதத்து இயல்" என்று ஆசார்யர்கள் போற்றுகிறார்கள். வீணகானம் செய்துகொண்டு பாடக்கூடிய வேதம் இது என்று பொருள். இதனால், நம்மாழ்வார் வேதத்தை தமிழ் செய்ததோடு வேதாந்த தத்துவத்தைக் கலையாகவும் செய்திருக்கிறார் என்று தெரிகிறது.



வட இந்தியா வேதத்திற்கும் வேதாந்தத்திற்கும் பிறப்பிடமென்றும் தென் இந்தியா கலைகளுக்குப் பிறப்பிடமென்றும் சொல்லுகிறார் ரவீந்திரநாத டாகுர். ரிஷிகள் தத்துவமாகக் கண்டதை ஆழ் வார்கள் கலையாகக் கண்டிருக்கிறார்கள். கலைகளில் 5 அழகுக் கலைகள்: நடனம், சங்கீதம், சித்திரம், சிற்பம், கவிதை ஆகியவை. இவற்றில் கவிதை, கலை களின் ராணி. இந்தக் கலைகளுக்குள்ள வசீகரசக்தி யாவரும் அறிந்ததே. தத்துவத்தைக் கலையாக்கும் போது, உதாரணமாக இசைப் பாட்டாகப் பாடும் போது அதற்குப் பிரத்யேக வசீகரசக்தி கிடைத்துவிடு கிறது. வேதாந்தம் சிலருக்குத்தான் புரியும்; ஆழ்வார் பாடல்களோ பலருக்கும் உபயோகப்படும். வேதாந்த உண்மைகளை அமுதொழுகுகின்ற தமிழினில் விளம்பி னார் சடகோபர் என்று பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் பாடியிருக்கிறார். இது தமிழுக்கு வெற்றி—கலைகளுக் கும் வெற்றி—இது பகவானுக்கும் வெற்றி.

வேதம் தமிழ் செய்த நம்மாழ்வாரைத்தான் சட கோபர் என்றும் சொல்வதுண்டு. இவரே ஸ்ரீவைஷ் ணவர்களின் பரமாசாரியர்: அதாவது ஆசார்யர்களுக் கும் ஆசார்யர். இவர் வேளாள வகுப்பினர். எனினும் இவரைச் சதுர்மறைப் புரோகிதன் என்று பாடியிருக்

இவர் பாரதம் பாடிய வில்லிபுத்தூரார். குலத்தைக் காட்டிலும் ஞானமே பெரிது.

பகவானுக்கு வெற்றி என்றால் என்ன? ஹிரண்யன் ராவணன் முதலான துஷ்டர்களை நிக்ரகம் செய்து வெற்றி பெற்றபோது அவரது உள்ளம் பூரித்து வீர புஜங்களும் பூரித்து உயர்ந்தனவாம். சிஷ்ட பரிபாலனம் செய்யும்போது அதே பூரிப்பு. ஆனால் நம்மாழ்வார் வேதம் தமிழ் செய்த பாடல்களைப் பெற்று அந்த வீரத்தோள்கள் முன்பே அடையாத புதியதொரு பூரிப்பையடைந்து நிமிர்கின்றனவாம். ஏனென்றால் துஷ்ட நிக்ரக வெற்றிபோல் அல்ல இது: ஒரு துளி ரத்தம் சிந்தாமல், அஹிம்ஸா முறையிலேயே துஷ்டர்களையும் திருத்தக் கூடிய அருள் நெறியல்லவா நம்மாழ்வாரின் அருமையான பக்தி மார்க்கம்?

குட்டிக் குழந்தைக்கு கதை

1

அன்னமும் காக்கையும்

ஒரு பெரிய குளம்.

அந்தக் குளத்தில் ஒரு அன்னப் பறவை.

அது பால் போல வெள்ளை வெளேர் என்று இருந்தது.

அந்தக் குளத்துக்கு ஒரு காக்காய் வந்தது.

அந்தக் காக்காய் கன்னங்கரேலென்று கறுப்பாய் இருந்தது.

அன்னம் காக்காயைப் பார்த்து,

"கரி நிறத்தை நீரில் கலக்காதே !

என் கேணி அழகைக் கெடுக்காதே !"

என்றது.

அதற்குக் காக்காய்,

“உன் தளுக்கும் பிலுக்கும்
தரையில் நடந்தால்
தானே ஒழியும்.
கருப்பு நிறம் ஆனாலும்
காலமெல்லாம் கலைந்து போகாது
உன்னழகுக்கு என்னழகு குறைந்
தது?”

என்று சொல்லிப் போய்விட்டது.

கதை முடிந்தது. கத்திரிக்காய் காய்த்தது.



தன் முதுகு தனக்குத் தெரியாது என்று சொல்கிறார்களே, தெரியுமா? தன்னைவிட பிறத்தியாரை இளப்பம் செய்வது சுபாவமாக இருக்கிறதல்லவா?

தந்திரம்

நரி தந்திரம் செய்துச் சேவலைப் பிடிக்கிறது. அப்பேற்பட்ட ஆபத்திலும் தைரியத்துடனிருந்து சேவல் தந்திரம் செய்து தன்னை விடுவித்துக்கொள்ளுகிறது. எப்போதும் தைரியமும் சாமர்த்தியமும் வேண்டும்.

ஒரு ஊரில் வெள்ளை வெளேர் என்று வெண்மையான ஒரு சேவல் கோழி இருந்தது. அந்தக் கோழி மற்றக் கோழிகளோடு தெருக் கொல்லைகளில் குப்பையைக் கிளறிப் புழுக்களையும் அரிசிமணிகளையும் தேடித் தின்று நன்றாய்ப் பருத்துக் கொழுத்து இருந்தது.

அந்த ஊருக்குப் பக்கத்தில் ஒரு காடு. அந்தக் காட்டில் ஒரு குள்ளநரி இருந்தது. குள்ளநரிக்கு வெள்ளைச் சேவலைப் பிடித்துத் தின்ன ரொம்ப ஆசையாக இருந்தது.

ஒரு நாள் சேவல் தனிமையாக ஒரு குப்பை மேட்டைக் கிளறிக்கொண்டிருந்தது. அதுதான் நல்ல சமயம் என்று குள்ளநரி சேவலிடம் ஓடி வந்தது. குள்ளநரி சேவலைப் பார்த்து,

“சித்திரக் கொண்டைச் சேவலே !
சிவப்புக் கொண்டைச் சேவலே !
உத்தமப் பாடகன் என்று உன்னை
உலகம் எங்கும் புகழுகிறார்
நேர்த்தியான உன்தன் குரலினை
நேரில் கேட்க ஆசையே !
கீர்த்தனை ஒன்று பாடுவாய் !
கேட்டு மகிழ வேண்டுமே !”

என்றது.



குள்ளநரியின் கள்ளத்தனமான பேச்சு வெள்ளைச் சேவலுக்குத் தெரியவில்லை. குள்ளநரி நிஜமாகவே புகழ்கிறது என்று நினைத்துக்கொண்டது அந்த வெள்ளைச் சேவல். அது தன்னைப் பெரிய பாடகனாகவே நினைத்துக்கொண்டு, கழுத்தைத் தூக்கி அண்ணாந்து பார்த்து, கண்ணை மூடிக்கொண்டு,

“கொக்கரக் கோ கோ!

என்று கத்திற்று.

அதே சமயத்தில் குள்ளநரி ஒரே பாய்ச்சலில் சேவலின் கழுத்தைக் கௌவிக் கடித்து வாயில் வைத்துக்கொண்டு காட்டைப் பார்த்து ஓட்டம் பிடித்தது.

ஊரில் உள்ளவர்கள் “குள்ள நரி நம்முடைய வெள்ளைச் சேவலைக் கொள்ளை அடித்துக்கொண்டு ஓடுகிறது! பாருங்கள்! பாருங்கள்!” என்று கத்தினார்கள்.

அப்பொழுது நரியின் வாயில் இருந்த சேவல்,

“நரிஅண்ணா! நரிஅண்ணா! கேட்டீரா!
நாடுஅறிய நகர் அறிய உன்வாயில்
நான் இருக்க, நலங்கெட்ட ஊரார்கள்
நரிக்கே நான்சொந்தம் என்று அறியாமல்
தம்மது என்று சொல்லுகிறார் கூசாமல்.
மூடருக்குச் சொல்லவேணும் நீ இப்போ!
‘நரிவாயில கொண்டசேவல் நரிக்குத்தான்
உரியது என்று அறிந்துகொண்டு போங்களிப்போ!
என்றிப்போ சொல்லவேணும் நரிஅண்ணா!”

என்றது.

நினைத்த காரியம் கைகூடி விட்டது என்று கண் தலை தெரியாமல் சந்தோஷப் பட்டுக் கொண்டிருந்த குள்ளநரி, ரொம்பப் பெருமையோடு

"நரிவாயில் கொண்ட சேவல்
நரிக்குத்தான்! தெரியாதோ?"

என்று சொல்ல வாயைத்திறந்தது. அவ்வளவுதான், சேவல் நரியின் வாயிலிருந்து நழுவித் தப்பி ஓடிப் பறந்து பக்கத்தில் இருந்த ஒரு மரத்தின்மேல் ஒரு கிளையில் உட்கார்ந்து கொண்டு கீழே பார்த்தது, கைக்கு எட்டினது வாய்க்கு எட்டாமல் ஏமாந்து விட்ட நரி மேலே பார்த்தது. அப்பொழுது வெள்ளைச் சேவல்,

"பாட்டாலே நான் கெட்டேன்-
அதிகப் பேச்சாலே நீ கெட்டாய்"

என்றது. இதற்குள் ஊரில் இருந்து ஜனங்கள் ஓடி வந்தார்கள். நரியும் காட்டுக்குள்ஓடிமறைந்துவிட்டது.

சுகாதாரம்

கண்ணுக்குத் தெரியாத சின்னஞ்சிறு கிருமிகள் சம்பாஷிப்பதுபோல் வெகு தமாஷாகக் கதைபோல் எழுதியிருக்கும் இவ்விஷயம் உங்கள் மனதில் நன்கு பதியும் என்று நம்புகிறேன்.

பகட்டுப் பட்டுக்குட்டை

சிச்சிலுப்பைக்கிருமி (சின்னம்மைக்கிருமி) ஒரு கந்தைத் துணியில் வாழ்ந்துவந்தது. அதற்குப் பக்கத்தில் ஈரமான ஒரு தரையில் இன்புளூவென்ஸா ஜுரக்கிருமி குடி இருந்தது. இன்புளூவென்சாக்கிருமி சிச்சிலுப்பைக் கிருமியைப் பார்த்து "ஏது ரொம்ப வாடிப்போய் இருக்கிறாய்?" என்று கேட்டது. அதற்கு சிச்சிலுப்பைக் கிருமி, "அறிவு வளர வளர நமக்கெல்லாம் திண்டாட்டமாகத்தான் இருக்கிறது. நான் யாரையாவது பிடித்துக்கொண்டு கொஞ்சகாலம் உலகத்தில் க்ஷேமமாக வாழலாம் என்றுதான் பார்க்கிறேன். ஆனால் யாரையும் பிடித்துக் கொள்ள முடியவில்லை. என்னை ஒருவருமே தொட்டு எடுக்கமாட்டேன் என்கிறார்கள்" என்றது.

"பகட்டான பட்டுக்குட்டையில் குடியிருந்துமா உன்னை யாரும் தொட மனம் இல்லாமல் போகிறார்கள்!" என்று கேட்டது இன்புளூவென்ஸா ஜுரக்கிருமி.

"பள்ளிக்கூடங்களில் இப்பொழுது பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுக்கும் பாடம், 'வழியில் கிடக்கும் எந்தப் பண்டத்தையும் எடுக்கலாகாது' என்பதுதான். அதனாலேதான் என்னை யாருமே எடுப்பதில்லை." என்றது சிச்சிலுப்பைக் கிருமி.

இப்படி இந்த அணுஜீவன்கள் இரண்டும் பேசிக்கொண்டிருந்த வழியோரமாகக் கமலா பள்ளிக்கூடத்திற்குப் போய்க்கொண்டிருந்தாள். அவள் கண்ணிலே கொஞ்சம் சரிகையோடு துலங்கின பட்டுக்குட்டை தென்பட்டது. உடனே கமலா குனிந்து அந்தப் பட்டுக்குட்டையை எடுத்தாள். காற்றில் உதறினாள். அதை மடித்துக் கையில் வைத்துக் கொண்டாள். கொஞ்ச தூரம் போனதும் அந்தக் குட்டையால் முகத்தைத் துடைத்துக்கொண்டு அதில் மூக்கைச் சிந்தினாள். அவ்வளவுதான். சிச்சிலுப்பை பரம சந்தோஷத்தோடு, "என் கண்ணே கமலா, உன்னை என் வீடாக்கி குஞ்சும் குட்டியுமாக நான் வாழ இடம் தந்தாயே" என்று சொல்லி தனக்குள்ளே சந்தோஷப்பட்டுக் கொண்டது.

* * * * *

கொஞ்ச நாட்கள் ஆனதும் ஒருநாள் கமலா பள்ளிக்கூடத்தில் வகுப்பில் உட்கார்ந்துகொண்டிருந்தாள். அப்பொழுது மீனாக்ஷி அம்மாள் வகுப்பு நடத்திக் கொண்டிருந்தார்கள். ஜல தோஷமும் அதன் காரணங்களும் என்ற பாடம் நடந்துகொண்டிருந்தது. கமலாவுக்கு உடம்பு கதகத என்று இருந்தது. அடிக்கடி தும்மிக் கொண்டிருந்தாள். அவள் தும்மின தும்பல் வகுப்பில் எங்கும் பரவியது. அவள் தும்மின போதெல்லாம் சிச்சிலுப்பைக் கிருமிகள் "கண்ணே கமலா! இன்னும் கொஞ்சம் தும்மடி கண்ணே!" என்று சொல்லிக்கொண்டிருந்தன. அவளும் அந்தப்படியே தும்மிக்கொண்டிருந்தாள். தும்மல் வழியாகச் சிச்சிலுப்பைக் கிருமியின் பிள்ளைகள் காற்றில் பறந்து வகுப்பில் இருந்த சில குழந்தைகளின் மூச்சு வழியாக புகுந்து ஆளுக்கு ஒரு குழந்தையைப் பற்றிக் கொண்டன.

மறு நாள் கமலா பள்ளிக்கூடத்துக்குப் போகவில்லை. இரண்டு நாட்களுக்குள் கமலாவின் தாயார், "உனக்குச் சிச்சிலுப்பை போட்டி இருக்கிறது. முகமெங்கும் வாரிக் கொட்டியிருக்கிறதே சின்ன அம்மை," என்றாள். கமலாவுக்கு மூன்று நாளாக நல்ல ஜுரம். சிச்சிலுப்பைக் கிருமிகளுக்கு கமலாவின் உடம்பில் நல்ல விருந்

துச் சாப்பாடு கிடைத்தது. பள்ளிக்கூடத்தில் தும்மல் வழியாகப் பல குழந்தைகளுக்குள் புகுந்த சிச்சிலுப்பைக் கிருமிகளுக்கும ரொம்பக் கொண்டாட்டமாக இருந்தது. நாள் தோறும் பள்ளிக்கூடத்திற்கு வரும் குழந்தைகளின் எண் ணிக்கை குறைந்துகொண்டே வந்தது.

கொஞ்ச நாட்களில் கமலாவுக்கு உடம்பு குணமடையத் தொடங்கிவிட்டது. அவளுக் குள் புகுந்து சுகமாகப் பண்டிகை கொண்டா டின சிச்சிலுப்பைக் கிருமிகள் கவலைப்படத் தொடங்கின. கமலாவின் ரத்தத்தில் சிச்சிலுப் பைக் கிருமிகளோடு சண்டைபோட்டு அவளைக் காப்பாற்றக் கூடிய பாதுகாப்பு அம்சங்கள் இருந்தன. அந்த அம்சங்கள் சிச்சிலுப்பைக் கிருமிகளோடு யுத்தம் பண்ணிக் கடைசியில் அந்தக் கிருமிகளைக் கொன்றுவிட்டன.

கமலாவின் உடம்பில் புகுந்த சிச்சிலுப்பைக் கிருமிகளெல்லாம் சாகும் முன் கற்பகம் கமலா வைப் பார்க்க வந்தாள். கற்பகத்திற்குள் வற் கனவே இன்புளுயென்ஸா கிருமிகள் குடியிருந் தன. கமலா அவளுக்குக் கொஞ்சம் மிட்டாய் களைக் கொடுத்தாள். கற்பகம் அந்த மிட்டாய் களில் இரண்டு மிட்டாய்களைத் தின்றாள். மற்ற வைகளைத் தன் தம்பிக்கும் தங்கைக்கும் பத்திர மாக வைத்துக்கொண்டாள். மிட்டாய் வழியாக

கற்பகத்திற்குள் புகுந்த கிருமிகளைப் பார்த்ததும் அவள் உடம்பிலிருந்த கிருமிகள் "நீங்கள் எப்படி இங்கே புகுந்தீர்கள்?" என்று கேட்டன

"பிரமாதமான மந்திர வித்தை மாயவித்தை ஒன்றும் செய்யவில்லை. கற்பகம் வந்திருந்த போது கமலா இவளுக்குக் கொஞ்சம் மிட்டாய் கொடுத்தாள். கமலாவின் மூக்குச் செளியின் ஒரு துளி அந்த மிட்டாயில் லேசாகப் பட்டதும் படாததுமாக இருந்தது. நாங்கள் அந்த மிட்டாய் களில் மறைந்து இருந்தோம். இந்தச் சமாசாரம் கற்பகத்திற்குத் தெரியுமா? இவள் அந்த மிட்டா யைத் தானும் தின்று தம்பி கிட்டுவுக்கும் தங்கை காமுவுக்கும் கொடுத்தாள். நாங்களும் உங்க ளோடு வந்து சேர்ந்ததோடு, எங்களில் சிலர் காமு, கிட்டுவுக்குள்ளும் குடி புகுந்தார்கள்" என்றன. கிட்டுவுக்கு ஏற்கெனவே சிச்சிலுப்பை போட்டி இருந்தது. அதனாலே அவன் உடம்பில் சிச்சிலுப்பைக் கிருமிகளோடு சண்டைபோடத் தயாராகச் சில சண்டைக்காரக் கிருமிகள் இருந் தன. ஆகையால் கிட்டுவுக்குள் புகுந்த சிச்சிலுப் பைக் கிருமிகள் எல்லாம் செத்துவிட்டன. காமு தனக்குள் புகுந்த கிருமிகளோடு பள்ளிக்கூடத் துக்குப்போய் வந்தாள். சிச்சிலுப்பைக் கிரு மிகள் குஞ்சும் குட்டிகளுமாகப் பரவுவதற்குக் கொஞ்ச நாட்கள் ஆகும். அந்த நாட்கள் முடி

வடைகிற்மட்டும் சிச்சிலுப்பைக் கிருமிகள் அழுக்குப்போல அடங்கி மறைந்திருந்து வளர்ந்து வரலாயின.

காமு எந்த எந்தத் குழந்தைகளுக்கு முன் தும்மினளோ அந்த அந்த குழந்தைகளுக்கும் சிச்சிலுப்பைக் கிருமிகள் பரவத் தொடங்கின. காமு தும்மினபோதெல்லாம் சிச்சிலுப்பைக் கிருமிகளுக்கு எங்கே தரையில் விழுந்துவிடப் போகிறோமோ என்ற பயம் இருந்தது. தரை யில் விழுந்தால் அவை செத்துப்போகும்.

அப்படிப் பயப்படத் தேவை இல்லை. அநேகமாகக் காமு தன் தோழிகளுக்கு முன்னே தான் தும்மிக்கொண்டிருந்தாள். அந்தக் கிரு மிகள் மூக்கு வழியாகத் தொண்டைக்குள்ளும் தொண்டையிலிருந்து பல பாதைகள் வழியாக ரத்தத்திற்குள்ளும் புகுந்து பரவி வந்தன.

ராமுவுக்குத் தன் சிச்சுலுப்பைக் கிருமி களைப் பகிர்ந்து கொடுத்தாள் காமு. ராமுவின் தகப்பனர் அவன் தும்மினவுடனே, அவனுக்குச் சிச்சிலுப்பை வரப்போகிறது என்று சந்தேகித்து, அவனுடைய ரத்தத்தைப் பரிசோதிக்க ஒரு வைத் தியரிடம் சொன்னர். அந்த வைத்தியர் பரி சோதித்துப் பார்த்து சிச்சிலுப்பை வரப்போகிற தாகத் தெரிவித்தார். ராமுவின் தகப்பனர் தன் ரத்தத்தை குழந்தையின் உடம்பில் புகுத்தச்சொன்

ணர். சிச்சிலுப்பைக் கிருமிகள் வேறு குழந்தை களுக்குப் பரவாமல், அவன் சுகம் அடையும் மட்டும் அவனைத் தனியாகப் பிரித்து வைத்துக் காப்பாற்றியும் வந்தார். ராமுவின் தகப்பனர் செய்த பிரகாரமாகவே பல வீடுகளிலும் பெற்றோர்கள் செய்யத் தொடங்கினர்கள்.

அப்பொழுது சிச்சிலுப்பைக் கிருமிகள்,

ராமுவின் தகப்பனர் வந்தாரே

நமது வாழ்வைக் கெடுத்தாரே,

என்று சொல்லிக்கொண்டு அங்கும் இங்கும் தங்களுக்கு வசதியான இடங்களில் மறைந்து மறு வருஷம்மட்டும் காத்திருக்கத் தீர்மானித்து விட்டன.

எப்படி நம் கண்ணுக்குத் தெரியாத சின்னஞ் சிறு கிருமிகள் நம்முள் புகுந்து வியாதியைப் பரவச் செய்கின்றனவென்பது புரிந்ததா? நாம் கூடியவரை சுத்தமாயிருந்தால்தான் கண்ட வியாதியும் நம்மை அணுகாது. சுத்தமான வாழ்க்கையே சுகத்திற்கு ஆதாரம்.

கெடுவான் கேடு நினைப்பான்

ஒரு மகா நகரத்தில் ஒரு மஹா தனிகர் இருந்தார். இப்போதைய ராஜ்ய க்ஷோபம் போலே மஹத்தான க்ஷோபம் விளைந்த வளவிலே அவர் தம்முடைய விலையுயர்ந்த பொருள்களையெல்லாம் வேறொரு அக்ரஹாரத்தில் ஸுரக்ஷிதமாகச் சேமித்துவைத்துவிட்டுவரவேணுமென்று கருதிப் பொன்னகைகள் முதலியனவற்றை ஒரு பையில் போட்டு எடுத்துக்கொண்டு வண்டியில் புறப்பட்டுச் செல்கின்றார். பத்தெட்டு மைல் தூரம் சென்றவாறே அங்கு ஒரு அக்ரஹாரமுண்டு; அவ்விடத்தில் தமக்கு உயிர்த்தோழரான வொருவர் கிராமத்தலைவராக இருக்கின்ற செய்தியறிந்து அவரிடம் சென்று தம்முடைய ப்ரவ்ருத்தியை உள்ளபடி தெரிவித்து "இன்னமும் நெடுந்தூரம் போகவேண்டியிருப்பதனால் இரவிலும் நான் நிர்ப்பயமாகச் செல்லும்படி இரண்டொரு சேவகர்களை என்னோடுகூட அனுப்பினால் நல்லது" என்று சொல்லிக்கொண்டார்.

அது கேட்டவுடனே அவருடைய நெஞ்சில் கெட்ட எண்ணம் பிரபலமாகக் காலூன்றி விட்டது. இன்றிரவு எப்படியாவது இவரைக் கொலை செய்வித்து இவரது பொருள்களைக் கவர்ந்துவிடவேணுமென்கிற தீய எண்ணம் ஊர்ஜிதமாய்விட்டது. அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் பேரன்பு பாராட்டி விடைகூறினார். "இதற்கென்ன பிரமாதம்! நல்ல வீர சூரர்கள் என் கைவசமிருக்கிறார்கள்; இரண்டு பேர்களை அவசியம் அனுப்பித் தருகிறேன்; இந்தச் சிறியவுபகாரங்கூடவா என்னாலாகாமற் போய்விடும்? உயிரையும் தந்து உதவக் காத்திருக்கிறேன்; நம்முடைய வீட்டிலேயே சிறிது போது வீற்றிருந்தால் இதோ நான் சென்று ஆள்களை ஏற்பாடு செய்துகொண்டுவருகிறேன்; சிறிது தாமதிக்கவேணும்" என்றார்.

அதற்கு அவர் அப்படியேயென்று அனுமதிக்க அந்த கிராமத்தலைவர் உடனே சென்று, கொலைக்கு அஞ்சாத இரண்டு பாதகர்களை விளித்துச் செய்தி தெரிவித்து, வழியிடையிலே எவ்வகையினாலாவது அந்த மஹா தனிகரைக் கொலைசெய்து பொருள்மூட்டையைத் தன்னிடம் கொணர்ந்து கொடுக்கவேண்டியதென்றும், பிறகு சிறந்தபரிசுபெற்றுக்கொள்ள வேண்டியதென்றும் திட்டஞ்செய்து அவ்விரு

வருடன் இரண்டொரு நாழிகையில் தனிகரி டம் வந்து சேர்ந்தார். அவ்விருவரையும் காவலாளராகக் கொண்டு தனிகர் புறப்பட்டுவிட்டார். வண்டியின் முன்னணியில் அக்கொலை பாதகர்களிருவரும் உட்கார்ந்தனர். பின்னணியில் தனிகர் ஆபரணப் பையுடன் உட்கார்ந்திருக்கின்றார். வண்டி வேகமாகச்செல்கின்றது. முன்னே உட்கார்ந்திருக்கின்ற சேவகர்கள் கொலைபுரியும் விஷயமாக சில ஸங்கேத வார்த்தைகளை இடையிடையில் மெல்லிய குரலுடன் சொல்லிக்கொண்டிருக்கவே தனிகர்க்கு ஸந்தேஹமுண்டாகி அவர்களைக்கவனிக்க விருப்பமுண்டாயிற்று. இருவருடையவும் மடியில் கூரிய கத்தியிருப்பதைக் கண்டார். எதற்காக கத்தி யென்று கேட்டார். எப்போதும் வெளியில் செல்லும்போது எங்களிடம் கத்தியிருப்பது வழக்கமென்றார்கள். 'நாம் மிகவும் ஜாகரூதையுடன் இருக்கவேண்டியது அவசியம்' என்று தனிகர் உறுதிகொண்டார். பரவசமாக வரும் உறக்கத்தையும் வென்றொழித்தார்.

இரவு பன்னிரண்டு மணி வேளை வந்தது. சேவகர்கள் வண்டியை நிறுத்தச்சொல்லி "பெரியவரே! மேலே பெருங்காடுகள் வருகின்றன; கள்ளிருளாகவும் இருக்கின்றது. இந்தத் தோப்பிலே இரண்டொரு மணி காலம் தங்கி

யிருந்து சிறிது விச்ராந்தி செய்துகொண்டு போவது நலம்'' என்றனர். தனிகர் அப்படியே செய்வோம் என்று இசைந்து வண்டியை நிறுத்தி மாட்டையவிழ்த்துக் கட்டிவிட்டு ஓரிடத்திலே படுக்கையை விரித்துப் படுத்துக் கொண்டார்; பூஷணப்பையைத் தலையணையாக அமைத்துக்கொண்டார். கண்ணைத் திறந்துகொண்டேயிருந்தும் அயர்ந்து உறங்குவதுபோல் கொறுட்டைவிட்டுப் பாசாங்கு செய்தார். அருகிலேயே படுத்துக்கொண்டிருந்த சேவகர்களிருவரும் இதுவே நல்ல சமயமென்றெழுந்து சிறிது தூரம் சென்று குழி வெட்டத் தொடங்கினார்கள். குழியை வெட்டிவிட்டு மீண்டு வந்து தனிகன் கழுத்தில் கத்தியை வீசியெறிந்து காரியம் முடிக்கவேணுமென்பது அவர்களுடைய கருத்தாயிருந்தது.

இதனைத் தெரிந்துகொண்ட தனிகர் சடக்கென யெழுந்து பூஷணப்பையையும் கையிலெடுத்துக்கொண்டு ஒரு மரத்தின் மேலேறிப் பதுங்கியிருந்தனர். சேவகர்கள் குழிவெட்டிக் கொண்டிருக்கிறார்கள். இச் செய்தி இங்ஙனமாக, இச்சேவகர்களை ஏற்பாடு செய்தனுப்பின கிராமத்தலைவர் வீட்டில் உறக்கங்கொள்ளாமல், தனிகனைக் கொன்று சேவகர்களே பொருள்களைக் கவர்ந்து சென்றுவிட்டால், நமது கண்

ணில் ஒன்றும் காட்டாமலே போய்விட்டால் என்செய்வதென்று திகிலடைந்து தாமும் புறப்பட்டு வந்துகொண்டிருக்கிறார். எந்த இடம் கொலைசெய்வதற்குப் பாங்கானதென்று சேவகர்களிடம் திட்டம் செய்திருந்தாரோ அந்த இடத்திலேயே வண்டி நிறுத்தப்பட்டிருப்பதையும் கீழை படுக்கை விரிக்கப்பட்டிருப்பதையும் கண்டார். தனிகரையாவது சேவகர்களையாவது அங்கு காணப்பெறுமையினாலே 'நாம் திட்டம் செய்திருந்தபடி சேவகர்கள் தனிகரைக் கொலைசெய்து குழியில் புதைக்கக் கொண்டுபோயிருக்கிறார்களத்தனை ; படுக்கையும் வண்டியும் மாடும் இங்கேயிருப்பதால் அச்சேவகர்கள் மீண்டு இவ்விடமே வந்து சேருவர்கள் ; வரட்டும்' என்று எண்ணிக்கொண்டு தாம் அந்தப்படுக்கையில் படுத்துக்கொண்டார்.

அகாலத்தில் நெடுந்தூரம் வழி நடந்து வந்த சிரமத்தினால், படுத்தவுடனே பரவசமாக வுறங்கிவிட்டார்; கொறுட்டையும் வலிதாக வீசுகின்றது. சேவகர்கள் குழியை வெட்டிவிட்டு விரைந்து வந்து, படுக்கையில் கிடப்பவன் கழுத்திலே கத்தியை வீசியெறிந்து இரு துண்டமாக்கித் தலையணையைச்சோதிக்க ஆரம்பித்தனர். பூஷணப்பையை கண்டிலர். கொலையுண்டவன் அந்த நபர்தானு வேறு நபரா

என்று பார்க்கத் தோன்றுவதற்கு ப்ரஸக்தி லேசமும் இல்லாமையால் அதனைப் பாராதே, தனிகர் பூஷணப்பையை எங்கேயோ மாத்தடியில் மறைத்துவைத்திருக்கிறார் போலுமென்றெண்ணி அங்குமிங்கும் தேடித்திரிந்து கொண்டிருக்கிறார்கள் அவ்விரு சேவகர்களும்.

மரத்தின்மீது பொருட்பையுடன் பதுங்கியிருந்த தனிகர் கீழிறங்கி ஒரு வழியாலே சென்றோடி ஒரு டாணாவிற் சேர்ந்து போலீஸ் அதிகாரிகளை அவ்விடம் அழைத்துக்கொண்டு வந்து சேர்ந்தார். எங்குத் தேடியும் பூஷணப்பை காணாததால் இன்னது செய்வதென்று தோன்றாமல் திகைத்து ப்ரேதத்தின் அருகேயிருந்த சேவகர்கள், போலீஸ் சேவகர்களையும் தனிகரையும் கண்டவாறே குழறிப்போயினர். அதன்மேல் நடந்த செய்திகளை விவரிக்க வேணுமோ? "கெடுவான் கேடு நினைப்பான்" என்ற பழமொழிக்கு இக்கதையே சிறந்த சான்று. "அரசன் அன்று கொல்லும், தெய்வம் நின்று கொல்லும்" என்கிற பழமொழியும் சிலவிடங்களில் மாறுபாடுறுகின்றது.

" குழந்தைகளே! கம்பியைப் பிடித்துக் கொண்டு தாடியும் மீசையும் அழுக்கு உடையும், பரட்டைத் தலையுமாய் கோரஸ்வரூபத்துடன் நிற்கும் என்னைப் பார்த்து உங்களில் சிலர் சிரிக்கிறீர்கள். சிலர் வெறுக்கிறீர்கள். சிலர் பயப்படுகிறீர்கள். ஒரு சிலர் "ஐயோ பாவம்! பூச்சாண்டி!" என்று அனுதாபப்படுகிறீர்கள். அப்படித் தானே...என் கதையைக் கேட்டால் நீங்கள் என்மாதிரி துஷ்டனாகவும் போக்கிரியாகவும் இல்லாமல் நல்ல புத்திசாலியாய் உலகத்திற்கு உபகாரியாய் இருக்க மனம் தூண்டும்.

குழந்தைகளே! எனக்கும் அம்மா, அப்பா தாத்தா, பாட்டி, உடன் பிறந்த தங்கை, தம்பி... அக்கா......அண்ணன்......முதலிய எல்லோரும் உண்டு. நானும் செல்லமாகத்தான் முதலில்

வளர்க்கப்பட்டேன். என் தாத்தா என்னை மடியில் வைத்துக் கொண்டு அ. ஆ. இ. ஈ. ஞாயிறு, திங்கள்...சித்திரை வைகாசி... ஜனவரி, பிப்ரவரி...ப்ரபவ விபவ ...ஒன்று இரண்டு முதலிய சகலமும் சொல்லிக் கொடுப்பார்.

என் தலைவிதி வேறுவிதமாக இருந்ததால் அது ஒன்றுமே எனக்குப் பிடிக்காது தாத்தாவிடம் கோவம்கோவமாகவரும். அவரை ஏமாத்திவிட்டு எழுந்து ஓடிவிடுவேன். திரும்பவும் என் தாத்தா என்னைத் தேடி இழுத்துக்கொண்டுவந்து என்னை மிரட்டியும் லேசாக அடித்தும் பழயபடியே சொல்லித் தருவார். அவைகளை நான் பாடம் செய்யாமல் படுத்துவேன். பள்ளிக்கூடம் போவதாகச் சொல்லிவிட்டுக் கோலியாடப் போய்விடுவேன்.

கோலியாடும் சிநேகிதர்களுடன் சதா சுத்தியலேவோம். கடைத்தெருவில் ஒரு பாட்டி இடி

யாப்பம் விற்பாள். அதைத் திருடித் தின்பதற்

காக வேண்டுமென்றே நாங்கள் கும்பலாக அவள் கடைப் பக்கத்தில் நின்று "பாட்டி... பாட்டி..அதோ தேளு"..என்று கத்துவோம். பாட்டி அலறியடித்துக்கொண்டுஎழுந்துநாலு புறமும் பார்ப்பாள். அந்த சமயத்தில் திருடிக்கொண்டு ஓரே ஓட்டமாக ஓடிவிடுவோம்.

இந்தமாதிரி பழம் விற்பவர்கள், மிட்டாயி விற்பவர்கள் முதலியவர்களை ஏமாற்றித் திருடுவதில் வெகு சந்தோஷம் உண்டாயிற்று. என் தாத்தாவும் பாட்டியும் எனக்குக் கதை சொல்லுவார்கள். 'திருடுவது தப்பு. பிறரை அடிப்பது மகா குற்றம். இம்மாதிரி எல்லாம் செய்தால் பகவான் கண்ணைக் குத்திவிடுவார். ஒரு பையன் இப்படி செய்ததால் கண்ணைக் குத்திவிட்டார், ஸ்வாமி'...என்று கதை சொல்லும்போது 'அது வெறும் பொய்' என்று எனக்குத் தோன்றியது. "நான்தான் தினம் திருடுகிறேனே...ஸ்வாமி என் கண்ணைக் குத்தவே இல்லையே.....கண்ணுக்கு நோவுகூட வரவில்லையே! தாத்தாவே வெறுமனே இந்தமாதிரி சொல்லுகிறார்" என்று தோன்றியதால் தாராளமாகத் திருடித் தின்று வந்தேன்.

புத்திமட்டும் வளரவில்லையே யன்றி வயது வளர்ந்துவிட்டது. ஒரு நாள் என் சகா ஒருவனு டன் நான் கோயில் திருவிழா பார்க்கச் சென் றேன். அங்கு ஒரு குழந்தை அழுதுகொண்டு நின்றது. அதன் கையில் காப்பும் கழுத்தில் சங்கி லியும் இருந்ததை இருவருமாகத்திருடிக்கொண்டு ஓடியே போய்விட்டோம். என் சிநேகிதன் எப் படியோ மறைந்துவிட்டான். நான்மட்டும் அகப் பட்டுக் கொண்டேன். என்னை ஜெயிலில்போட் டார்கள். ஆதியிலேயே புத்திசரியாயிருந்துபெரிய வர்களின் வார்த்தையைக் கேட்டு நல்ல மார்க்கத் தில் நடந்திருந்தால் நான் இன்று இந்த கதிக்கு வந்திருப்பேனு? இனி புத்திவந்து என்ன உப யோகம்?...நீங்களாவது உங்கள்பெற்றோர்களின் வார்த்தைகளைத் தட்டாமல்நடந்து நல்லபிள்ளைகள் என்று பெயர் எடுத்து நன்ருக இருங்கள். என் னைப்போல் பாவியாகாதீர்கள்'' என்று ஒரு கைதி கூறினுன்.

இதைக்கேட்ட குழந்தைகள் வியப்பும்திகைப் புமடைந்து ப்ரமித்து நின்ருர்கள். கைதிகளில் மற்ருெருவன் தன் கதையைச் சொல்லலானுன்.

அடுத்த பாலர்மோகினியில் படிக்கிறீர்களா ?

2224

ஜகன் மோகினி

பாலர் மோகினி

இரண்டாவது புத்தகத்தில்

இம்முதல் புத்தகத்தில் எழுதியுள்ள அனைவரும் பல ரஸமான விஷயங்களை அளிப்பார்கள். தவிர, பல புதிய அம்சங்களும் சேர்க்கப்படும்.

1. ஸங்கீத அப்பியாசம்
2. மூளைக்கு வேலை
3. என்ன? ஏன்? எப்படி?
4. ஸம்ஸ்கிருதக் கதை
5. வேடிக்கைப் படங்கள்

* * * * *

முன்னதாகவே உங்கள் தேவைக்குப் பதிவு செய்து கொள்ளவேண்டும். இவ் வருட முடிவுக்குள் (பார்த்திப) இன்னும் 5 புத்தகங்கள் வெளிவரும். ஒவ்வொன்றும் 6 அணா. தபால் மூலம் 7 அணா. முன்னதாக எல்லா புத்தகங்களுக்கும் பண மனுப்புவோருக்குத் தபாற் செலவு இனும்.

The Balar Mohini Educative Booklets

The Children's Guide, Philosopher and Friend

GENERAL EDITOR

V.M. SRINIVASAN, M.A., B.L.

ஜகன்மோகினி பிரஸ், சிங்கப்பெருமாள்கோவில்.

THE BALAR MOHINI EDUCATIONAL SERIES

உங்கள் களிப்பே எமது வெற்றி

குழந்தைகள் முதல் கிழவர்வரை எல்லோரையும் பலவிதத்திலும் மகிழ்விப்பதே எமது நோக்கம். இதற்காக பலதரப்பட்ட தமிழ் விருந்தை வெவ்வேறு வெளியீடுகள் மூலம் அளித்துக் களிக்கிறோம். பாலர்களுக்கென்றே **பாலர்மோகினி** வெளியிடுவதுபோல், பெண்மணிகளுக்கென்றே **நந்தவனம்** வெளியிடுகிறோம். பாலர்மோகினியும் நந்தவனமும் 2 மாதங்களுக்கொரு முறை வெளிவருகின்றன. ஆனால் **ஜகன்மோகினி** மாதந்தோறும் வெளியாகி சகலமானவரையும்——வயது, ஜாதி, மதம் வித்தியாசமின்றி—மகிழ்விக்கின்றது. **தமிழ் வளர்க்கும் ஒவ்வொரு குடும்பத்திலும்** ஷை 3 வெளியீடுகளும் அவசியம் தவறாது படிக்கப்படவேண்டும். உங்கள் களிப்பே எம் வெற்றி.

—**மோகினி காரியாலயம்**